இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

ஞாயிற்றுக்கிழமை 14.06.2026

# ‘திராவிட மாடல்’ ஆட்சியின் சாதனையை ஒப்புக்கொண்ட விஜய்!

திராவிட மாடல் ஆட்சியின் சாதனையை ஒப்புக் கொண்டிருக்கிறார் முதலமைச்சர் விஜய். டெல்லியில் பிரதமர் மோடி முன்னிலையில் நடைபெற்ற நிதி ஆயோக் கூட்டத்தில் உரையாற்றிய விஜய் பேச்சில் இவை வெளிப்பட்டது.

**உலகளாவிய நிச்சயமற்ற பொருளாதாரச் சூழல்களுக்கு இடையிலும், இந்தியாவின் இரண்டாவது பெரிய பொருளாதார மாநிலம் தமிழ்நாடு - என்று முதலமைச்சர் விஜய் சொல்லி இருப்பது ‘திராவிட மாடல்’ ஆட்சியில் எட்டப்பட்ட சாதனை ஆகும்.**

**2024-25 ஆம் நிதி ஆண்டில், திராவிட மாடல் ஆட்சியில் 11.19 விழுக்காடு வளர்ச்சியை தமிழ்நாடு கண்டது. இரட்டை இலக்கப் பொருளாதார வளர்ச்சியை தமிழ்நாடு அடைந்தது. சாதாரணமான சாதனை அல்ல இது. இதே சாதனை தொடர்வதும் சாதாரணமானது அல்ல. 2025-26 ஆம் நிதி ஆண்டில் 10.83 விழுக்காட்டைத் தக்க வைத்து இரட்டை இலக்கச் சாதனையை இரண்டாவது முறையும் மெய்ப்பித்துக் காட்டினார் அன்றைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.**

**இந்தியாவின் இரண்டாவது பெரிய பொருளாதார மாநிலம் தமிழ்நாடு என்கிற சாதனையை திராவிட மாடல் ஆட்சியின் மூலமாக தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உயர்த்திக் காட்டினார்கள். இதனைச் சொல்லித் தான் விஜய்யும் பெருமைப்பட்டுக் கொண்டுள்ளார். தேர்தல் பரப்புரையில் தமிழ்நாடு குறித்தும், தி.மு.க. ஆட்சி பற்றியும் பொய் பேசினார் விஜய். ஆனால் நிதி ஆயோக் கூட்டத்தில், ‘வளர்ந்த மாநிலம் தமிழ்நாடு’ என்ற உண்மையைச் சொல்லி இருக்கிறார்.**

அதேபோன்று இந்தியாவில் தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண்களில் 42 விழுக்காடு பெண்கள் தமிழ்நாட்டில் உள்ளனர் என்ற திராவிட மாடல் ஆட்சியின் சாதனையையும் ஒப்புக்கொண்டுள்ளார் விஜய்.

திருக்குறளைத் தேசிய நூலாகவும் அறிவிக்க வேண்டும் என நிதி ஆயோக் கூட்டத்தில் பேசி இருக்கிறார் விஜய். திராவிட மாடல் ஆட்சியில் மு.க.ஸ்டாலின் அவர்கள் முதல்வராக இருந்த போதே 2021 ஆம் ஆண்டு திருக்குறளை தேசிய நூலாக அறிவிக்க வேண்டுமென வலியுறுத்தி இருந்ததை தமிழ்நாடு மறந்திருக்காது.

தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வை (NEET) தமிழ்நாடு அரசு எதிர்க்கிறது என்று நிதி ஆயோக் கூட்டத்தில் பேசி இருக்கிறார் விஜய். நீட் எதிர்ப்பு என இன்று பேசியிருக்கும் விஜய், ‘மருத்துவம் மட்டும்தான் படிப்பா?’ என்று கேட்டவர்தான். இன்று அவர் மனம் மாறி இருக்கிறார். அல்லது மனம் மாறியதாக நடிக்கிறார்.

**2025 ஆம் ஆண்டு நடைபெற்ற நிதி ஆயோக் கூட்டத்தில் உரையாற்றிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ‘‘அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் நீடித்த பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதே தமிழ்நாடு அரசின் தொலைநோக்குப் பார்வையாகும். எங்கள் மாநிலத்தின் வளர்ச்சி என்பது, சமூகநீதி, சமத்துவம் மற்றும் நிலையான வளர்ச்சி ஆகிய கொள்கைகளை மையமாகக் கொண்டுள்ளது” என்று குறிப்பிட்டார்கள். இதையே வேறு வார்த்தைகளில் சொல்லி இருக்கிறார் விஜய். ‘எல்லார்க்கும் எல்லாம்’ என்ற சொல்லை மட்டும் நீக்கி இருக்கிறார்.**

“தமிழ்நாட்டை 2030 ஆம் ஆண்டுக்குள் ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதார வளர்ச்சிகொண்ட மாநிலமாக மாற்றுவதே எனது இலக்கு ஆகும்” என்பது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அரசுத் துறையின் அனைத்துக் கூட்டங்களிலும் சொன்னது ஆகும். அதையே, ‘‘2036-ஆம் ஆண்டிற்குள் 1.5 டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக உயர்வதற்கு தமிழ்நாடு பணியாற்றி வருகிறது” என்று சொல்லி இருக்கிறார் விஜய்.

திராவிட மாடல் ஆட்சியில், தனது கனவுத் திட்டமாக ‘நான் முதல்வன்’ திட்டத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்கள். 48 லட்சம் மாணவ, மாணவியருக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்கப்பட்டது. ஐ.ஏ.எஸ். முதல் உலகளாவிய நிறுவனங்களில் வேலைகள் வரை மாணவ, மாணவியர் உயர்ந்தார்கள். இதையே காப்பி அடித்துச் சொல்லி இருக்கிறார் விஜய்.

‘‘ஆண்டுதோறும் ஐந்து இலட்சம் இளைஞர்களுக்கு உதவித் தொகையுடன் கூடிய பணியிடைப் பயிற்சிகள் (Internships) மற்றும் தொழில்துறையுடன் இணைந்த திறன் பயிற்சிகளை வழங்கும் “இளைஞர் திறன் மற்றும் வேலைவாய்ப்பு இயக்கத்தை” (Youth Skill and Employment Mission) செயல்படுத்த விழைகிறேன்” என்று சொல்லி இருக்கிறார் விஜய். இதுதான் மு.க.ஸ்டாலின் அவர்களின் ‘நான் முதல்வன்’ திட்டம் ஆகும்.

தமிழ்நாட்டுக்கு அறிவிக்கப்பட்ட மதுரை எய்ம்ஸ் மருத்துவ மனையை எப்போது கட்டித் திறப்பீர்கள் என்று கேட்காத விஜய், இரண்டாவது எய்ம்ஸ் மருத்துவமனையை கோவையில் அமையுங்கள் என்று சொன்னது ஜோக் ஆகத் தான் பார்க்க வேண்டி உள்ளது.

‘தி.மு.க. ஆட்சி தங்களைக் காப்பாற்றிக் கொள்ள நிதி ஆயோக் கூட்டத்தில் கலந்து கொள்கிறது’ என்று குற்றம் சாட்டியவர் விஜய். இன்று அவர் எதற்காக நிதி ஆயோக் கூட்டத்துக்குப் போனார்? “ஒன்றிய அரசுடன் ஆக்கப் பூர்வமான ஒத்துழைப்புடன் செயல்படுவதற்கு எங்கள் அரசு தொடர்ந்து உறுதி பூண்டுள்ளது” என்று விஜய் நெளிந்து குழைந்தது ஏனோ? தன்னைக் காப்பாற்றிக் கொள்ளவா?

**தன் மீதான 41 பேர் மரணத்துக்குக் காரணமான கரூர் சம்பவ சி.பி.ஐ. விசாரணையில் இருந்து தப்பித்துக் கொள்ளவா? அல்லது வருமான வரித் துறையில் ஏராளமான வழக்குகள் இருக்கிறதே? அதில் இருந்து தப்பிக்கவா?**




கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் காலை, தமது இல்லத்தில் தூத்துக்குடி வ.உ. சி. கல்லூரியின் 75 ஆண்டு கால முக்கிய நிகழ்வுகள் மற்றும் நினைவுகள் அடங்கிய நினைவு மலரை வெளியிட்டு வாழ்த்திய போது எடுத்த படம். கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., முன்னாள் அமைச்சர் பி.கீதாஜீவன் மற்றும் வ.உ.சி. கல்லூரி நிர்வாகிகள் உள்ளிட்டோர் உடன் உள்ளார்கள்.

## “ரீல்ஸ் மாடல்” ஆட்சியில் மேட்டூர் அணையைத் திறக்கவில்லை!

# விவசாயக் கடன் தள்ளுபடி போல, குறுவைத் தொகுப்பும் ஏமாற்றும் திட்டம்தான்!

### மாநில விவசாய அணிச்செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன் அறிக்கை!

சென்னை, ஜூன் 14-

கழக விவசாய அணிச் செயலாளர் ஏ.கே.எஸ். விஜயன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தமிழ்நாட்டில் விவசாய புரட்சியை ஏற்படுத்திய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ஆண்டுதோறும் ஜூன் 12 ம் தேதி மேட்டூர் அணை திறக்கப்பட்டு, விவசாயத்தை மேம்படுத்திய அந்த நடைமுறையை கூட இந்த நீர் மேலாண்மையிலும் அனுபவமில்லாத அரசு கடைப்பிடிக்க முடியாமல் தோற்றுப்போயிருக்கும் நிலையிலும், வேளாண்மைக்கு என தனி பட்ஜெட் அறிவித்த திராவிட மாடல் அரசின் பிதாமகர் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வேளாண்மை திட்டங்களை போல அல்லாமல், தற்போது வெற்று அறிவிப்பாக ரீலஸ் மாடல் அரசு வெளியீட்டிருக்கும் குறுவை தொகுப்பு மற்றும் மும்முனை மின்சார அறிவிப்பு என்பது அடுப்பை பற்றவைக்காமலேயே சமைப்பது போல உள்ளது என தி.மு. கழக விவசாய அணி கண்டனம் செய்கிறது.

தமிழ்நாட்டின் விவசாயப்புரட்சி என்பதும் விவசாயிகளின் பொற்காலம் என்பதும் தி.மு.க. ஆட்சி காலம்தான் என்பது மறைக்க முடியாத உண்மை, முக்கியமாக குறிப்பிட வேண்டுமென்றால், இலவச மின்சாரத்தை விவசாயிகளுக்கு வழங்கியது; ஆட்சி வந்தவுடன் 7,000 கோடி ரூபாய் விவசாயிகள் கடனை முழுமையாக தள்ளுபடி செய்தது.

அது மட்டுமல்ல; தி.மு.க. எதிர்க்கட்சியாக இருந்தபோதும் விவசாயிகளை கைவிட்டதும் இல்லை. ஆளும் கட்சியின் விவசாய வேதனைகளால் தற்கொலை செய்து கொண்ட விவசாயிகளை ஆட்சியாளர்கள் கொச்சைப்படுத்திய போது, அந்த குடும்பங்களை நேரடியாக சந்தித்து அவர்களுக்கு ஆறுதல் கூறி உதவியவர் திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

தமிழ்நாட்டின் அனைத்து விவசாயம் சார்ந்த மாவட்டங்களிலும் விவசாயிகள், விவசாய தொழிலாளர்கள், விவசாய சங்க பிரதிநிதிகள் சந்திப்பு கூட்டங்கள் , காவிரி மீட்பு பேரணி இப்படி பல விவசாயம் சார்ந்த நடவடிக்கைகளை எதிர்க்கட்சியாக இருந்தபோதும் தி.மு.க. செய்ததை தற்போதைய ஆட்சியாளர்கள் நினைவில் கொள்ளவேண்டும்.

#### தமிழ்நாட்டை உயர்த்தியது திராவிட மாடல் அரசு!

இதற்கெல்லாம் முத்தாய்ப்பாக ஒவ்வொரு ஆண்டும் சரியாக ஜூன் 12 மேட்டூர் அணைதிறப்பு, சோழர்கள் ஆட்சிக்கு பின்னர் அனைத்து நீர்நிலைகளும் தூர்வாரும் பணிகள், கடைமடை பகுதி வரையிலான நீர் பாசனம், வேளாண் மையங்களில் இடுபொருட்களும், விதை உரம் உள்ளிட்ட விவசாய உற்பத்தி பொருட்கள் போதுமான அளவு இருப்பு, அதிக நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள், அங்கு பணிபுரியும் சுமைப் பணி தொழிலாளர்களுக்கும் ஊதிய உயர்வு இப்படி இவைகளெல்லாம் வேளாண் வளர்ச்சியை நாட்டிலேயே உயர்ந்த மாநிலமாக தமிழ்நாட்டை உயர்த்திக்காட்டியது திராவிட மாடல் ஆட்சியின் பிதாமகர் அரசு.

தமிழ்நாட்டில் இந்த புரட்சிகளெல்லாம் நடைபெற்றுக்கொண்டிருந்த போது குளிரூட்டப்பட்ட கேரவனுக்குள் படப்பிடிப்பு தளத்தில் இருந்தவர்கள், தற்போது விவசாயிகளுக்கு என்ன தேவை? என்பதை கூட அறியாமல் குறுவை தொகுப்பு திட்டத்தையும், மும்முனை மின்சாரத்தையும் அறிவிப்பாக வெளியிட்டிருக்கிறார்கள் .

தேர்தல் நேரத்தில் யாரோ எழுதிக்கொடுத்த விவசாய கடன் தள்ளுபடி வாக்குறுதியை படித்து விவசாயிகளை ஏமாற்றி வாக்கு சேகரித்த அவர்கள் தற்போது, அதைக்கூட நிறைவேற்ற வக்கின்றி குறுவை தொகுப்பு திட்டத்தை அறிவித்து இருக்கிறார்கள்.

திராவிடமாடல் அரசின் பிதாமகர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடந்த கழக ஆட்சியில் கொடுத்த வாக்குறுதியின்படி தி.மு.க. அரசு 2021ஆம் ஆண்டு பொறுப் பேற்றவுடன், கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகள் பெற்ற நகைக் கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்தார்.

இப்படி விவசாயம் பற்றியும்,விவசாயிகளின் பிரச்சனை குறித்த புரிதல் இன்றியும், டெல்டா விவசாயத்தின் உயிர்நாடி மேட்டூர் அணை திறப்பு குறித்த அக்கறை இன்றியும் குறுவை திட்ட சாகுபடி தொகுப்பு திட்டத்தை அறிவித்து இருக்கிறது ரீல்ஸ் மாடல் அரசு.

கர்நாடகத்தில் மேகதாதுவில் அணை கட்ட எல்லா முயற்சியை எடுக்கும் காங்கிரஸ் தலைமையிலான அரசுக்கு எதிராக, தனது ஆட்சி கவிழ்ந்து விட கூடாது என்கிற பயத்தில் மேகதாது அணை பிரச்சனையில் வாய்திறக்கவே இந்த அரசு பயப்படுகிறது.

#### மின்தடையை போக்க நடவடிக்கை எடுப்பீர்!

தமிழ்நாட்டில் புதிதாக ஆட்சிப் பொறுப்புக்கு வந்திருக்கும் இந்த ரீல்ஸ் மாடல் அரசு, மாநிலம் முழுவதும் தங்களது அனுபவமற்ற நிர்வாக திறனால் ஏற்பட்டிருக்கும் மின் தடையை போக்க நடவடிக்கை எடுக்காமல், அதை திசைதிருப்பி மடைமாற்றம் செய்திட காரணம் தேடிக்கொண்டிருக்கும் அமைச்சர்களை கொண்டிருக்கும் நிலையில், விவசாயிகளுக்கான குறுவை தொகுத்திட்டம் வெந்த புண்ணில் வேலை பாய்ச்சுவதாகவே அமைந்திருக்கிறது.

ஆனால் கடந்த கழக ஆட்சியின்போது திராவிட மாடல் அரசின் பிதாமகர்மு.க.ஸ்டாலின்அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியின் நிர்வாக திறத்தால், 2021ல் இருந்த 32,595 மெகாவாட் மின் நிறுவுதிறன் 36,671 மெகாவாட்டாக உயர்த்தப்பட்டு, மாநிலத்தில் மின்வெட்டு இல்லாத நிலை உருவாக்கப்பட்டது. விவசாய இணைப்புகள்: மூன்றாண்டுகளில் சுமார் 2 லட்சம் விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்புகள் வழங்க ஆணையிடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

இப்படி திராவிட மாடல் அரசின் பிதாமகர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான ஆட்சியில் அனைத்து துறைகளுமே விவசாய மேம்பாட்டை மையப்படுத்தி செயல்பட்டதால்தான், கழக ஆட்சின் போது நெல் உற்பத்தி பல புதிய உச்சங்களை எட்டியது. தமிழ்நாட்டில் ஒட்டு மொத்த நெல் உற்பத்தி 120 லட்சம் டன் என்ற அளவைத் தாண்டியது. அரசின் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மூலம் 4 ஆண்டுகளில் 42 லட்சத்திற்கும் அதிகமான மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டது.

தி.மு.க. அரசின் 4 ஆண்டு காலத்திலேயே சுமார் 42,61,386 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு சாதனை படைத்தது. நெல் கொள்முதல் ஈரப்பத அளவினை 17 சதவீதத்திலிருந்து 22 சதவீதமாக அதிகரிக்க ஒன்றிய அரசிற்கு தமிழ்நாடு அரசு கோரிக்கை விடுத்து அதனை நடைமுறைப் படுத்தியது. விவசாயிகளின் நலனைக் காக்க, ஒன்றிய அரசின் ஆதார விலையுடன் மாநில அரசின் சார்பில் கூடுதல் ஊக்கத்தொகையும் வழங்கப் பட்டது.

ஆனால் திட்டங்களை மட்டுமே அறிவித்து “ரீல்ஸ் போடுங்கள் ஆட்சி தொடர்ந்துவிடும்” என்கிற கொள்கைகளோடு ஆட்சி நடத்தும் தற்போதய ஆட்சியாளர்கள், குறுவை தொகுப்பு, மும்முனை மின்சாரம் போன்ற வெற்று அறிக்கைகளை வெளியிடும் முன், அண்டை மாநிலமான கர்நாடாவில் தனது ஆட்சி நடக்க தமிழ்நாட்டில் முட்டுக்கொடுக்கும் காங்கிரஸ் கட்சி ஆள்வதால், அவர்களிடம் இணக்கமாக பேசி காவிரி நீரை பெறவேண்டும் , மேகதாது அணை கட்டுவதை எதிர்த்து பேசவேண்டும், அனைத்து கட்சி கூட்டத்தை நடத்தி வேளாண்மை கொள்கைகள் திட்டங்களை விவாதித்து கலந்து ஆலோசிக்க வேண்டும். விவசாய அமைப்பு பிரதிகளை அழைத்து பேசவேண்டும் .

#### கொஞ்சமாவது படித்து பார்க்க வேண்டும்!

எழுதிக்கொடுக்கும் அறிக்கைகளை ஏற்ற இறக்கத்தோடு பேசுவதற்கு முன்பு தி.மு.க. ஆட்சியின் சாதனைகளான, உபரி நிலத்தை மீட்டு விவசாயிகளுக்கு மறுவிநியோகம் செய்தது,விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் தந்தது,

நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை நாட்டிலேயே முதன்முதலில் கொண்டுவந்தது,

விவசாய தொழிலாளர் நல வாரியம் அமைத்தது, கரும்பு விலையை உயர்த்திக்கொடுத்தது, தமிழ்நாட்டில் உழவர் சந்தை அறிமுகம் செய்தது, கூட்டுறவு கடன் தள்ளுபடி அமலாக்கம் செய்தது,பயிர்க் கடன் வட்டி குறைப்பு, தமிழ் நாட்டில் உழவர் சந்திப்பு விரிவாக்கம் செய்தது,நெல் விவசாயிகளுக்கு சிறந்த ஊதியம் வழங்கியது,

பயிர் காப்பீட்டு மானியங்கள் மற்றும் இழப்பீடு வழங்கியது ,ஆதி திராவிடர் விவசாயிகளுக்கு அதிகாரம் அளித்தல்,காவிரி குண்டாறு இணைப்புத் திட்டம், தாமிரபரணி கருமேனியாறு நம்பியார் இணைப்பு திட்டம், கரும்புச் சாலை மேம்பாட்டு முயற்சி, தென்னை விவசாயிகளுக்கான நல உதவி, உபரி நிலத்தை மீட்டு விவசாயி களுக்கு மறுவிநியோகம் செய்தது,

#### விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் தந்தது!

நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை நாட்டிலேயே முதன்முதலில் கொண்டுவந்தது, விவசாய தொழிலாளர் நல வாரியம் அமைத்தது, கரும்பு விலையை உயர்த்திக்கொடுத்தது,தமிழ்நாட்டில் உழவர் சந்தை அறிமுகம் செய்தது, கூட்டுறவு கடன் தள்ளு படி அமலாக்கம் செய்தது, பயிர்க் கடன் வட்டி குறைப்பு,

தமிழகத்தில் உழவர் சந்திப்பு விரிவாக்கம் செய்தது, நெல் விவசாயிகளுக்கு சிறந்த ஊதியம் வழங்கியது, பயிர் காப்பீட்டு மானியங்கள் மற்றும் இழப்பீடு வழங்கியது,ஆதி திராவிடர் விவசாயிகளுக்கு அதிகாரம் அளித்தல், காவிரி குண்டாறு இணைப்புத் திட்டம், தாமிரபரணி கருமேனியாறு நம்பியார் இணைப்பு திட்டம், கரும்புச் சாலை மேம்பாட்டு முயற்சி,தென்னை விவசாயிகளுக்கான நல உதவி, விளிம்புநிலை விவசாயிகளுக்கு அதிகாரம் அளித்தல்

இப்படி விவசாயி களுக்கும், விவசாய தொழிலாளர்களுக்கும், வேளாண் வளர்ச்சிக்கும் தி.மு.க.வின் அரிய திட்டங்களில் சில வற்றை யாவது கொஞ்சம் படித்துப் பார்க்க வேண்டும். செய்வார்களா?

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.




சேலம் மாநகராட்சி கொண்டலாம்பட்டி மண்டலம் தாதகாப்பட்டி உழவர் சந்தையில் தூய்மை திருவிழா நிகழ்ச்சியில் மேயர் ஆ.இராமச்சந்திரன், பொதுமக்களுக்கு மஞ்சப்பை வழங்கினார். உடன் ஆணையாளர் லலித் ஆதித்ய நீலம், மாநகர நல அலுவலர் மரு.செ.ராம்குமார் மற்றும் தொடர்புடைய அலுவலர்கள் உடனிருந்தனர்.